02.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.43/2021

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவனேசன் | சாதி | |
| த/பெ | பிச்சைக்காரன் | மதம் | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 39/2023 |
| மாவட்டம் | | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் பள்ளிப்புதுப்பட்டு வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வாசுகியை எனக்கு தெரியும். அவர் எனது அக்கா. சாட்சிகள் 2 முதல் 4 வரை உள்ளவர்களை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன ராஜ்கிரனை எனக்கு தெரியும். அவர் என் அக்கா அ.சா.1ன் மகன் ஆவார். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 2ம் எதிரியை எனக்கு தெரியும். அவர் கஸ்தூரி. அவர் இறந்துபோன ராஜ்கிரன் மனைவி ஆவார். ஆஜர் 3ம் எதிரியை எனக்கு தெரியாது. எனக்கு 1 மற்றும் 4 எதிரிகளை தெரியாது. ராஜ்கிரன் இறந்து சுமார் 3, 4 வருடங்கள் இருக்கும். அவர் இறந்துவிட்டார் என்ற விபரம் 13.4.2019ம் வருடம் காலை சுமார் 6 மணியளவில் பள்ளிநெடியனுர் ரயில்வே கேட்டில் இருந்து பாண்டிச்சேரி நோக்கி வரும் ரயில்வே பாதையில் அங்கு ராஜ்கிரன் இறந்து கிடப்பதாக கேள்விப்பட்டு, நானும், என் அக்கா வாசுகி மற்றும் ஊர் பொதுமக்களுடன் சென்று பார்த்தோம். அப்போது நாங்கள் சென்று பார்த்த போது ராஜ்கிரனின் தலை மற்றும் கை, கால்களில் காயம் இருந்தது. இது சம்மந்தமாக எனது அக்கா வாசுகி கண்டமங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். நான் அப்போது உடனிருந்தேன். இது சம்மந்தாக காவல்துறையினர் அன்று என்னை விசாரித்தனர். அதன் பிறகு சுமார் 20 நாட்கள் கழித்து காவல்துறையினர்

என்னை விசாரித்தனர். 2ம் எதிரி சசி என்ற கஸ்தூரியும், இன்னொரு நபரும் ஆழியூர் கிராம நிர்வாக அலுவலர் முன்பு தன்னிச்சையாக சரண் அடைந்தனர். ராஜ்கிரனை அவர்கள் எவ்வாறு கொலை செய்தார்கள் என்ற விபரத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் எதிரிகள் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். இது குறித்து காவல்துறையினர் என்னை விசாரீத்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் கிராம நிர்வாக அலுவலரிடம் சென்ற விபரம் எனக்கு நேரிடையாக தெரியாது. இந்த விபரத்தை என்னிடம் யார் சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்து காவல்துறையினர் எவ்வளவு நாட்கள் கழித்து என்னை விசாரித்தனர் என்று என்னால் குறிப்பாக சொல்ல இயலாது. என்னிடம் காவல்துறையினர் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

02.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No. /20**

அ.சா.

**பெயர்.திரு.**

சாட்சி இன்று 02.06.2023 மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**